படையில் தேர்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவித்த பிறகு யாரையும் திருப்பி அனுப்பியதாகத் தகவல் இல்லை.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் அடிப்படையில் மற்றக் காவலர்களுக்குக் கொடுக்கப்படும் பதவி உயர்வு, பெண் காவலர்களுக்கும் கொடுக்கப்படுமா? மற்ற காவலர்களுக்கு அளிக்கப்படும் துப்பாக்கிப் பயிற்சி, ஜூடோ பயிற்சி இவர்களுக்கும் அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரிகள் என்கிற பதவிக்கு என்னென்ன பயிற்சிகள் தேவையோ, அவை அனைத்தும் இவர்களுக்கும் அளிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தகுதி, திறமை எல்லாம் இருந்து, உத்தரவு அனுப்பி, வரவேண்டுமென்று சொல்லி, வந்த பிறகு வேண்டாம் என்று நீக்கிவிட்டார்கள். அதனால் முன்பிருந்த வேலையை விட்டு விட்டு, இதற்கு வந்த பிறகு, இந்த வேலையையும் இழந்து இருக்கிற நிலைமை அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அரசு அவர்களுக்கு ஆவன செய்ய முன்வருமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

காரியாப்பட்டியில் வாசனைத் தைலத் தொழிற்சாலை.

*வினா எண் 488—**திரு. எம். பிச்சை:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அருப்புக்கோட்டை தொகுதி காரியாப்பட்டியில் மல்லிகைப்பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது?

(ஆ) எவ்வளவு சீக்கிரத்தில் தொழிற்சாலை அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) : மல்லிகைப்பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைச் கூட்டுறவுச் சங்கத் திட்டமாகச் செயல்படுத்த தேவையான விபரங்கள் பெறவும், சாத்தியக் கூறுகளை திட்டவட்டமாக ஆராயவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1981 மார்ச் 26]

திரு. எம். பிச்சை: பேரவைத் தலைவர் அவர்களே, காரியாப் பட்டிப் பகுதியில் விவசாயிகள் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் எடுக்கும் தொழிலை உப தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காரியாப்பட்டியை மையமாக வைத்து, ஏறத்தாழ 1000 ஏக்கர்கள் மல்லிகைப் பூ விவசாயம் செய்கின்ற காரணத்தினால், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்ற காரணத்தால், அதை உடனடியாக ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோவை மாவட்டத்தில் மேட்டுப் பாளையம் நகரில் மெசர்ஸ் சக்தி எச்ஸ்டாக்ஸ் என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, கூட்டுறவு முயற்சியில் கூட்டுறவு வகையில் காரியாப்பட்டியில் விரைவில் அந்த மல்லிகைப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை உருவாக்க விரைவாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. எம். பிச்சை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரியாப்பட்டியில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு இப்போது காரியாப்பட்டியில் அமைப்பது என்ற வகையில் ஆராய்ந்து கொண்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மல்லிகைப் பூவிலிருந்து தயாரிக்கப்படும் ஜாஸ்மின் காங்கிரீட், ஜாஸ்மின் ஆப்சலூட் ஆகிய இரண்டு வகையான எண்ணெய் எடுக்கப்பட்டால், அவைகள் கிலோ 30,000 ரூபாய், 40,000 ரூபாய் என்று வெளிநாடுகளுக்கு விற்கின்ற நிலைமை இருப்பதால், இதை அரசாங்கம் உடனடி யாகப் பரிசீலனை செய்து, வெகு விரைவிலே ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனை அனுதாபத்தோடு, விரைவாகப் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9–20)

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கப்படுகிற தொழிற்சாலையை வேறு எங்காவது அமைக்

கின்ற யோசனை அரசிற்கு இருக்கிறதா? திண்டுக்கல் பகுதியில் அதிகமாக மல்லிகைப் பூ பயிரிட்டு வருகிறார்கள். அங்கு இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதைக்குறித்து பரிசீலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த ஆத்தூர் தொகுதியில் அதனை அமைக்கின்ற வகையில் அவர் சொன்ன யோசனைகளை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தினால்—நேஷனல் கோ-ஆப்பரேட்டிவ் டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன்—உதவியுடன் முப்பது இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலையை அமைக்க துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கம் கோ-ஆப்பரேட்டிவ் அக்ரி கல்ச்சுரல் சர்வீஸ் சொசைட்டி—மூலமாக நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமாக மல்லிகைப் பூ விளையக் கூடிய சேலம் மாவட்டத்தில் பனைமரத்துப்பட்டியில் வாசனை தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா? பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய எந்த விவரமும் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை.

*வினா எண் 489—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் துவங்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருள்கள் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?